**துருசவிய நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

துருசவிய நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,676,060 கிரயமான கணனிகள், அலுவலக உபகரணங்கள், அலுவலக தளபாடம் மற்றும் இயந்திரங்கள் தற்போதும் பயன்பாட்டிலுள்ள போதிலும் பயன்தரு ஆயுட்காலத்தை கருத்தில் கொண்டு மிள்மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நியமம் 07 இன் 92 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதன் மூலம் காலக்கிரமத்தில் முறையான நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை கருத்தில் கொண்டு அத்தகைய சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில் நியாயசபை ஊழியர் பிரச்சனைகளில் தலையிடுவதற்கு முன்னர் நிதியத்தின் 05 ஊழியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பாக நியமம் 01 இன் 23 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மூலதன மாணியங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,057,587 பெறமதியான நிலையான சொத்துக்களின் பெறுமதிக்கு சமமான தொகையொன்று துருசவிய நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்படுவதற்கு பதிலாக நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | திருத்த நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் எடுக்கப்படும். | மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கு சமமான மூலதனம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புக்கள் மீதான வட்டி ரூபா 748,538 தொகையாக காணப்பட்ட போதிலும் அப் பெறுமதி ரூபா 1,025,576 ஆக கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இதனால் வட்டி வருமானம் ரூபா 277,038 ஆல் கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | திருத்த நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வட்டி மாத்திரம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிச்செயலாற்றல் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த மீளாய்வாண்டின் பணிக்கொடை நிதியல்லா சீராக்கங்களின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அப் பெறுமதியிலிருந்து மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடையை கழித்த பின்னர் மிகுதி தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு நிதியல்லா சீராக்கங்களின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக தொழிற்படு மூலதன சீராக்கங்களின் கீழ் காட்டப்படடிருந்தது. | திருத்த நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 5-17 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 826,110 கூட்டுமொத்தமான பெறவேண்டிய கடன் மீதி அறவிடப்பட முடியாதிருந்தது. | துருசவிய நிதியத்தால் மேடை தராசுகளை (platform scales) கொள்வனவு செய்வதற்காக சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான கோரிக்கை கடிதங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அத்தகைய சங்கங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. | கடனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இல்லாவிடின் துருசவிய நிதியத்திற்கு மீண்டும் மேடை தராசுகளை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 06 மாதங்களில் அறவீடு செய்யும் அடிப்படையில் இறப்பர் விரிப்பை (rubber sheets) கொள்வனவு செய்வதற்காக 02 துருசவிய சங்கங்களுக்கு 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான கடனில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு தவணைப் பணமும் அறவீடு செய்யப்படடிருக்கவில்லை. | இது தொடர்பாக இறுதி ஞாபகமூட்டல் கடிதங்கள் ஊடாக இகலோயா மற்றும் கரவிற்ற ஜனபதயவில் உள்ள துருசவிய சங்கங்களிற்கு அனுப்பபட்டிருந்ததுடன் எதிர்வரும் வாரத்தினுள் கடனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் அறிவித்திருந்தனர். | ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணையாளர் மூலம் கடன்கள் வழங்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1646 | பொது 268(அ) படிவத்தில் பதிவு செய்யப்பட்ட மாதாந்த பொழிப்புக்களின் மூலப்பிரதிகளுடன் சேர்த்து நாளாந்த ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்துவரும் மாதாத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்த நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் எடுக்கப்படும். | ஏற்கனவேயுள்ள சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல் அவசியமானதாகும். |
| (ஆ) | 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் 32(3) ஆம் பிரிவு | நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து 20 ஆண்டு காலப்பகுதி கடந்த பின்னரும் 14(2)(கி) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பணிப்புரைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அவை தொடர்பாக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியில் விதிகளை பிரசுரிப்பது தொடர்பான ஆவணங்கள் வரிசை அமைச்சு ஊடாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததென முன்னாள் முகாமைத்துவம் குறிப்பிட்டிருந்தது. எனினும் அவற்றின் செயன்முன்னேற்றம் தற்போது இனங்காணப்பட்டு வருகின்றது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் பணிப்புரைகள் பிரசுரிக்கப்பட்டு அவை தொடர்பாக பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2008 மார்ச் 03 ஆம் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கை | அரச வங்கிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் முதிர்ச்சியடைந்ததும் இடைக்கால முதலீடுகளிற்காக இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியால் செலுத்ததப்படும் வட்டி விகிதத்திற்கு உட்பட்டு இரண்டு அல்லது மேற்பட்ட காலப்பகுதிகளிற்கு வங்கி வைப்புக்களில் அல்லது திறைசேரி பிணைமுறிகளில் மீள முதலீடு செய்யப்பட வேண்டும். எனினும் ஆரம்பத்திலிருந்து நிதியத்தால் 06 மாத காலப்பகுதிக்கு குறுங்கால வைப்புக்களில் ரூபா 8,512,831 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | ஊழியர்களிற்கு பணிக்கொடை செலுத்துவதற்கு பயன்படுத்தப்படக்கூடியவாறு நிதியத்தால் குறித்த நிலையான வைப்புக்கள் பேணப்படுகின்றன. பெரும்பாலும் நிலையான வைப்புக்களின் வட்டி விகிதம் திறைசேரி பிணைமுறிகளை விட உயர்வாக காணப்படுகின்றது. இதனால் முதலீடுகள் நிலையான வைப்புக்களில் மேற்கொள்ளப்படுவதால் நட்டம் இழிவுபடுத்தப்படுகின்றது. | குறுங்கால வங்கி வைப்புக்களில் முதலீடு செய்யப்படுவதற்குப் பதிலாக திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு இணங்க 02 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு முதிர்ச்சியடையும் காலப்பகுதிகளிற்கு வங்கி வைப்புக்களில் செயற்திறனாக முதலீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,469,974 மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 234,947 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 2,235,027 தொகையான முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் மூலதன மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,057,587 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்கு சமமான தொகையொன்று வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த நிகழ்வு நிதி விளைவுகளில் ஏற்பட்ட குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 வருமான போக்குகள் தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது அரச மானியம் ரூபா 46,561,250 ஆக காணப்பட்டதுடன் ஏனைய செயற்திட்டங்களிற்கான மானியம் ரூபா 14,419,669 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 31,762,045 கூட்டுமொத்தமான மூலதன மானியம் மற்றும் ஏனைய செயற்திட்டங்களிற்கான மானியத்துடன் ஒப்பிடும் போது 92 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 29,218,876 அதிகரிப்பொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறுநிலவுடமை இறப்பர் விவசாயிகளின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் 14 | துருசவிய மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களிற்கு பல தடவைகள் இது | சங்கங்களை தரமிடுல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும் ஆகையால் |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட 712 துருசவியசங்கங்களை தரமிடுதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது . உரிய செயன்முறை விரைவாக பூர்த்தி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | சங்கங்களை ஸ்தாபித்த நோக்கங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன. |
| (ஆ) | உற்பத்தி செயற்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் சிறுநிலவுடமையாளர் பெருந்தோட்ட தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 - 2016 காலப்பகுதியின் போது மொனராகலை மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 130 கிராமிய இறப்பர் மன்றங்கள் மற்றும் 31 மொத்த செயன்முறைப்படுத்தும் நிலையங்களை கையேற்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு அமைச்சு செயலாளர் அங்கீகாரத்தை வழங்கியிருந்த போதிலும் 77 மன்றங்கள் மற்றும் 06 செயன்முறைப்படுத்தும் நிலையங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | துருசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறித்த கிராமிய இறப்பர் மன்றங்கள் அனைத்தும் ஒரே தடவையில் துருசவிய நிதியத்தால் கையேற்கப்பட முடியாது. அனைத்து மன்றங்களும் துருசவிய சங்கங்களாக முதலில் பதிவு செய்யப்பட வேண்டும் அதன் பிரகாரம் 130 கிராமிய இறப்பர் மன்றங்களில் 53 மன்றங்கள் 31 மொத்த இறப்பர் செயன்முறைப்படுத்தும் நிலையங்களில் 25 நிலையங்களுடன் சேர்த்து துருசவிய நிதியத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தது. | 2017 மார்ச் 01 தொடக்கம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலப்பகுதி கடந்திருந்ததால் கையேற்கும் செயன்முறை மேலும் தாமதப்படுத்தப்படக் கூடாது. |

## 3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 - 2012 காலப்பகுதியின் போது மொத்தமாக இறப்பர் விரிப்புக்களை செயன்முறைப்படுத்துவதற்காக 03 நிலையங்கள் தொடர்பாக ரூபா 3,492,301 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்நிலையங்களில் 02 முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அதே நேரம் ஏனைய கட்டிடம் பயன்பாட்டிக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மாவட்டத்தில் கெதிகல்ல காலணியில் நிர்மாணிக்கப்பட்ட மொத்த செயன்முறைப்படுத்தும் நிலையங்களின் உற்பத்திச் செயன்முறை நிறுத்தப்பட்டிருந்தது. கேகாலை கணேபல்லவிலுள்ள மொத்த செயன்முறைப்படுத்தும் நிலையத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் சுற்றாடல் மாசுபடுதல் தொடர்பாக ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக அந் நிர்மாணங்கள் இடையில் கைவிடப்பட வேண்டியிருந்தது. இரத்தினபுரி மாவட்டத்தில் எரம்பேபொலவில் உள்ள மொத்த செயன்முறைப்படுத்தும் நிலையத்தின் நிர்மாணங்கள் அரைவாசியில் நிறுத்தப்பட்டிருந்தன. | சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |